786

இலாஹீ

# இஸ்லாத்தின் தத்துவார்த்த சாரம்.

கூத்தூர்

P. ரஹ்மான் சாஹிபு அவர்கள்

இயற்றியது.

---

ஷியாரால்

நாகபட்டணம்

ஸ்காட்டிஷ் பிராஞ்சு பிரசில் அச்சிட்டு

வெளியிடப்பட்டது.

---

1926.

# FOREWORD

The author of this small handy vol[illegible] necessity of bringing forward a series o[illegible] type, since long years round, as a matter o[illegible] light to the nooks and corners of the world, where the ignorance and darkness are prevailing to the total discontent and dissatisfaction of the mortal beings. This is the preferatory publication in its classification, with various evidences of truth of the Moslem-faith, collected from different classic literatures of the wel-known moslem saintly and sagely authors of the years past, in order to give public a clear and concise idea of the clean, pure, sublime truth of the faith. The body of the work is written in easy and eligible form, so as to be within the touch of, both the lowness and loftiness.

The author has written a number of books, purely dealing on the fictions of the several religions in existance, in which, he presents minutely and imperatively, the unavoidable, all and ever acceptable proofs, which show that the Moslem-faith, is the faith in the right sense of the word. Those books will be published in no time, one by one. Quotations from the Holy *Quran* and other religious works are gathered and placed in the course of the proceedings of this pamphlet, then and there, so as to justify the statements, which he speaks of, besides, the same is being loaded with the weiguty religious informations, which is being assured will meet the requirements of the age. It is humbly hoped that the work will prove usefulness to a great extent, for all to whom hereunto, the aspects of the Moslem-faith threw little light.

It is sent-forth in humble dependence on the blessings of the Almighty to render it effectual, in promoting and devoloping the spread of the truth and the extension of the Almighty Kingdom.

**R. Kutubdin,**

The Author's Son.

Kuthur,
1—9—26.

இலாஹி.

# இஸ்லாம்.

இஸ்லாம் என்னும் அரபிவாக்கியத்தின் தத்துவார்த்தமானது ஆண்டவனுடைய சட்டத்துக்கு முற்றிலுங் கட்டுப்பட்டுக் கீழ்ப்படிந்து நடந்து வரும்படி ஆக்யாபிக்கும் ஆண்டவனுடைய கட்டளையாயிருக்கிறது. (அல்குர் ஆன். 3—18).

இந்தக் கட்டளைக்குட்பட்டு சகல சிருஷ்டிப் பொருட்களும் ஆண்டவனுடைய சட்டத்துக்குக்கட்டுப்பட்டுக் கீழ்ப்படிந்து வரவேண்டியது அவைகளின் பேரில் நீங்கலாக் கடமை யல்லவா?

தன் கடமையை சிரமேற்கொண்ட எல்லா சிருஷ்டிகளும் (மனிதனைத்தவிர) ஆண்டவனுடைய சட்டத்துக்குக்கட்டுப்பட்டுக் கீழ்ப்படிந்து நடந்து வருவது பிரத்தியட்ச அனுபவமாயிருக்க (அல்குர் ஆன். 3—82).

மனிதன் மட்டும் தன்னுடைய ஆண்டவனைத் தெரிந்து அவன் கட்டளைக்கு முற்றிலுங் கட்டுப்பட்டு நடக்கும்படியான உண்மைத் தத்துவத்தை அறிந்துக்கொள்ள முடியாத அந்தகாரத்தில் அழுந்திவிட்டான். அதநிமித்தம் மிகவும் கேவலமான சிருஷ்டிப் பொருட்களை தெய்வங்களாக மதித்து அவைகளின் பாதத்தடியில் தன் பெருமை பொருந்திய சென்னியை சாய்க்கிறான். இவன் தன் நிலைமை தெரியாமல் பாதாளத்தில் விழுந்து விட்டான்.

600 008

ஆண்டவன் மனிதனை மிகவும் மேலான வற்றிற்கெல்லாம் மேலானவனாகப் படைத்திருந்தும், தன் அறிவீனத்தினால் மனிதன் கீழானவற்றிற்கெல்லாம் கீழானவனாகப் போய்விட்டான் (அல்குர்ஆன் 95--4–5) இதன் காரணமே தன் சிருஷ்டிகளைத் தெரிந்துக்கொள்ள முடியாமல் அவன் மனமானது குருடுப்பற்றிப் போய்விட்டது.

இந்தக் குருட்டு மனதையுடைய மக்களைக் கெடுப்பதற்காக சில சுவயக் காரியப் புலிகளால் சிருஷ்டிக்கப்பட்ட ஆண்டவக் கூட்டங்கள் உலகத்தில் மலிந்துக்கிடக்கின்றனர். இன்னம் தாதுவர்க்கம் தாவர வர்க்கம், ஜீவவர்க்கம் முதலியவைகளே மனிதர்கள் வணங்கும் தெய்வங்களாக இருந்து வருகின்றன. இந்தத் தெய்வங்களெல்லாம் தெய்வங்களல்லவென்று ஆண்டவன் தன திருமறையில் மனிதர்களுக்கு எச்சரிக்கை செய்திருக்கிறான் (அலகுர் ஆன் 25–3).

எந்த தெய்வம் சர்வ உலகங்களையும் சிருஷ்டித்து ரட்சித்துக் கொண்டுவருகிறதோ அந்த தெய்வம் இன்னதென்று அறிந்துக்கொள்ள சக்தியற்ற மனிதர்களே உலகில்மிகுந்துக் காணப்படுகின்றனர். இவர்களின் கூற்றுக்கு உலகில் சரியான ஆதாரங்களிருக்கின்றனவா என்பதை அவர்கள் அறிந்துக்கொள்ளவில்லை. நமது ஏகப்பரிபூர்ண ஆண்டவனைத் தவிர மற்றொரு ஆண்டவனிருக்க இடமில்லை என்பதை ஆண்டவனுடைய திருமறையின் ஒரு சிறிய அத்தியாயமானது நமக்கு விளக்கிக் காட்டியிருக்கிறது. அதாவது:—

“ஆண்டவன் ஒருவன். [ஆண்டவன் ஒருவனைத் தவிர வேறொரு ஆண்டவனில்லை] அந்த ஆண்டவனையே சகல வஸ்துக்களும் சார்ந்திருக்கின்றன (ஆண்டவன் பரிபூரணமானவன் அந்தப் பரிபூரணத்துக்குள் சகல வஸ்துக்களும் அடங்கியிருக்கின்றன). அவன் பெறவுமில்லை (ஆண்டவன் ஒருவரைப் பெறவுமில்லை) அவன் பெறப்படவுமில்லை (ஆண்டவனை ஒருவர் பெறவுமில்லை) அவனைப்போல் ஒரு வஸ்துவுமில்லை” (அல்குர் ஆன் 112) என்னும் உண்மையை ஆண்டவனே கூறியுள்ளான்.

இந்தத் தெய்வத்திருமறையில் ஆண்டவன் ஒருவன் என்னும் உண்மையை ருஜூப்படுத்த அவன் பரிபூரணமானவன் என்று இரண்டாவது வாக்கியத்தில் சுட்டிக்காட்டியிருக்கிறது. ஆண்டவன் பரிபூர்ணமானவனாக இருப்பதால் அவன் பெறவும் பெறப்படவும் தகுதியில்லை என்பதையும் அவனைப்போல் ஒரு வஸ்துவுமில்லை என்பதையும் வெளிப்படையாகவே சுட்டிக்காட்டியிருக்கிறது. ஆண்டவன் பரிபூர்ண

மானவன் அவனைப்போல் ஒரு வஸ்துவுமில்லை என்னும் தத்துவார்த்தத்தை அறியாமல் மனிதர்கள், பஞ்ச பூதங்களை தெய்வமாகப் பாவித்து அவைகளின் பாதத்தடியில் தங்கள் சென்னியை சாய்க்கவும் ஆண்டவனுக்கு மனைவிமக்களிருப்பதாக எண்ணி அவர்களைக்கொண்டாடவும் முற்படுவோர்களென்பதை அறிந்திருந்த ஆண்டவன் அப்படியில்லை என்று நமக்கு எச்சரிக்கை செய்திருக்கிறான், இந்த ஆண்டவனுடைய எச்சரிக்கையையுங் கவனிக்காமல் பல தெய்வங்களை உற்பத்திசெய்து அவர்களுக்கு மனைவிமக்களிருப்பதாகவுங் கற்பித்துக்கொள்ளுகிறதாக இருந்தால் அது நமது அறிவீனமேயாகும்.

ஆண்டவன் பரிபூர்ணமானவன் என்னும் தத்துவார்த்தத்தை கவனிக்கும்போது அந்தப் பரிபூரணமானது சர்வ லோகங்களிலும் உள்ளும் புறமும் ஒரு அணுவளவும் இடம்விடாமல் "பார்க்குமிடமெங்குமொரு நீக்கமற நிறைந்திராநின்ற பரிபூரணமானது எங்கும் நிறைந்திருக்கும்போது அதே விதமான மற்றொரு பரிபூரணமான ஆண்டவனிருக்க எங்ஙன மிடந்தரும். இந்தப் பரிபூரண ஆண்டவன் சர்வ உலகங்களிலும் உள்ளும் புறமும் நிறைந்து தன் அதிகாரத்தை செலுத்திக்கொண்டிருக்கும்போது அதே விதமான மற்றொரு பரிபூரண ஆண்டவன் அதற்குள்ளிருக்கவாவது அதிலிருந்து வெளிப்படவாவது அதற்குள் பிரவேசிக்கவாவது இடமில்லாமல் சூனியமாய்ப் போவதை நாம் கண்கூடாகக் காணலாம் இந்த வெண்மையான உண்மையை மறுக்க ஒருவரும் முன் வரமாட்டார்கள்.

இப்போது சில மனிதர்களால் ஆதரிக்கப்படும் ஆண்டவக் கூட்டங்களெல்லாம் நமது பரிபூரண ஆண்டவனுடைய சிருஷ்டிகளாயாவது அல்லது பெயரளவில் மட்டும் ஆண்டவக் கூட்டங்களாயாவது இருக்கத்தகுமேயல்லாது உண்மையில் ஆண்டவக் கூட்டங்களாக இருக்க இடமில்லை அன்றி பரிபூரணமல்லாதவர்களையும் ஆண்டவனாகச் சொல்லமுடியாது. நமது பரிபூரண ஆண்டவனுக்கு மாதாபிதாக்களாவது மனைவி மக்களாவது இருக்க இடமில்லை. அப்படி இருப்பதாக சொல்லுகிறதாயிருந்தால் அவர்களும் நமது பரிபூரண ஆண்டவனைப்போல் பரிபூரணர்களாக இருக்கவேண்டியது அவசியம். ஒரு பரிபூரண நாயனுக்குள் மற்றொரு பரிபூரண நாயனிருக்க இடந்தராதபோது மாதாபிதா மனைவி மக்களிருக்க எப்படி யிடந்தரும், ஒரு பரிபூரண ஆண்டவனுக்கு பரிபூரணமல்லாத மாதா பிதா மனைவி மக்களிருப்பது இழிவாகுமாதலின் ஆண்டவன் ஒருவனன்றி வேறொரு ஆண்டவனில்லை என்பதும், அவன் எவ்வித பந்தத்தவுமற்ற பரிசுத்தமானவன் என்பதும் பிரத்தியட்ச உண்மையாகும்.

ஆண்டவன் மகா பெரிய சக்திவாய்ந்த விவேக சாதுர்ய முள்ள ரஹ்மானுயிருக்கிறான் அவனுடைய விவேக சாதுர்யத்தை மனிதனுடைய மனத்தினாலும் கிரகிக்க முடியாத உச்சஸ்தானத்தை உடைத்தாயிருக்கிறான். மனிதனோ பாதாளத்தில் கிடக்கிறான் பாதாளத்தில் கிடக்கும் மனிதன் நமது ஆண்டவனுடைய தெரிசனானந்தப் பேரின்பப் பாக்கியத்தைப் பெற்றுக்கொள்ளுகிறதா யிருந்தால் அந்த நாயன் காட்டிய வழியின் மூலமாக அதாவது அவன் வேத சட்டத்தின் மூலமாகப் பெற்றுக்கொள்ள முடியுமேயல்லாது வேறு வழியில்லை ஆதலின் மனிதன் ஆண்டவனுடைய சட்டத்துக்குச் சட்டுப்பட்டு நடக்க வேண்டியது கடமையாயிருக்கிறது. இந்தக் கடமையை நிறைவேற்றாத மனிதன் அவன் ரூபத்தில் மனிதனேயாயினும் அவனை மனிதனென்று சொல்லுவது கூடாது. இவன் மனித லெட்சணத்திற்கருகமுள்ளவனாகவு மாட்டான்.

மனிதனென்றுப் பெயரெடுத்த ஒருவன் மகாப் பெரிய கீர்த்தி வாய்ந்தவனாயிருக்கிறான். சகல சிருஷ்டிப்பொருட்களும் மனிதனுடைய உபயோகத்திற்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. சகல சிருஷ்டிகளையும் மனிதனுக்குக் கீழ்ப்படியும்படியும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. (அல்குர் ஆன்) எல்லா சிருஷ்டிகளும் மனிதனுக்கு கீழ்ப்படியத் தயாராயிருந்து வருகின்றன.

கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாங்
 காடி வெண்புலி வாயையுங் கட்டலாம்
ஒரு சிங்க முதுகின்மேற் கொள்ளலாங்
 கட்செவியெடுத் தாட்டலாம்
வெந்தழலினிரதம் வைத்தைந்து லோகத்தையும்
 வேதித்துவிற் றுண்ணலாம்
வேறொருவர் காணாமல் உலகத்து லாவலாம்
 விண்ணவரை யேவல் கொளலாம்
சந்ததமும் இளமையோ டிருக்கலாம்
 மற்றொரு சரீரத்திலும் புகுதலாம்
ஜலமேல் நடக்கலாம் கனல்மே லிருக்கலாம்
 தன்னிகரில் சித்தி பெறலாம்
சிந்தையை யடக்கியே சும்மாயிருக்கின்ற திறமரிது
 சத்தாகியென் சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே.
 தேசோமயானந்தமே.

இவ்வளவு பெருமை வாய்ந்த மனிதனுடைய அந்தஸ்துக்குத் தகுந்த ஒரு மேலான பரிபூரண ஆண்டவன் பாதத்தில் தன்னுடைய சென்னியை சாய்ப்பது அவனுக்குக் கீர்த்தியேயல்லாது மனிதனுடைய உபயோகத்திற்காக சிருஷ்டித்துக் கொடுக்கப்பட்டிருக்கிற தாதுவர்க்கம் தாவர வர்க்கம் ஜீவ வர்க்கம் முதலியவைகளின் பாதத்தடியில் மனிதன் தன் பெருமை பொருந்திய சென்னியை சாய்ப்பது எவ்வளவு துரதிஷ்டமாகும்.

ஆண்டவன் மனிதனை மேலானவற்றிற்கெல்லாம் மேலானவனைப் படைத்திருந்தும் அவன் அறிவீனத்தினால் மிகவும் கீழானவற்றிற்கெல்லாம் கீழானவனாகப் போய்விட்டான். என்று ஆண்டவனே கூறியுள்ளான் (அல்குர் ஆன் 95-4-5)

இதற்கிணங்கவே மனிதன் பாதாளத்தில் தலைகீழாக விழுந்து கிடக்கிறான் ஆண்டவன் மனிதனைப் பகுத்தறிவுள்ளவனாக சிருஷ்டித்திருந்தும் பகுத்தறிவில்லாத வஸ்துக்களின் பாதத்தடியில் தன் சென்னியை சாய்ப்பது எவ்வளவு விசனிக்கத் தக்கதாயிருக்கிறது. இந்த அறிவீனத்தை நிவர்த்தி செய்வதற்கு ஆண்டவனுடைய திருவேதமாகிய குர் ஆன் ஷரீபு உதவி புரியுமேயல்லாது மற்ற எவ்விதக் கிரந்தங்களாலும் உதவிசெய்ய முடியாது. எந்த ஒரு மகானாலும் முடியாது. இவர்களுக்கெல்லாம் ஆண்டவனுடைய திருவேதமே அஸ்திவாரமாக இருக்கவேண்டியது அவசியம்.

இப்போது உலகத்தில் வேதமென்றுப் பெயர்பெற்றிருப்பவைகளில் இஸ்லாமிய திருவேதமே ஆண்டவனுடைய திருவேதமாயிருக்கிறது. இதுவே ஆண்டவனுடைய சத்திய வாக்காகவுமிருக்கிறது. இதைத் தவிர்த்து மனிதன் வேறு வழியில் பிரவேசிப்பானேயானால் இவன் துன்மார்க்கனாகவும் ஆண்டவனுக்கு எதிர் கட்சியிலிருப்பவனாகவும். மதிக்கப்படுவான் (அல் குர் ஆன் 7-179) ஆதலின் மனிதன் ஆண்டவனுடைய சட்டத்துக்கு முற்றிலும் கட்டுப்பட்டு நடக்கவேண்டிய கடமைப்பட்டவனாக இருக்கிறான் உலகத்தில் மனிதனுக்கு சட்டமானது அவசியமானவைகளிலொன்றாயிருக்கிறது. இவ்வுலகில் மனிதனுக்கு சட்டமில்லாத வரையில் மிருகங்களாகவே பாவிக்கப்படுவான் மனிதன் சன்மார்க்கத்தில் நடக்கவேண்டியதற்காக ஒரு சட்டம் அவசியமாயிருக்கிறது. அந்த சட்டம் ஆண்டவனால் கொடுக்க வேண்டியதும் அவசியமாயிருக்கிறது இகலோகக் காரியங்களுக்கோ அல்லது பரலோகக் காரியங்களுக்கோ மனிதர்களா லேற்படுத்தப்படுகிற சட்டங்க

ளெல்லாம் சிறப்புடைய பிரயோஜனத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன ஆண்டவனுடைய சட்டமோ மனிதர் ஜன்ம சாபல்லியத்தை பெற்றுக்கொள்ளுவதற்காகவே ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இந்த ஆண்டவனுடைய திருவேத சட்டத்தின் மூலமாக நமக்கு சுருக்கமான சில கட்டளைகளிடப்பட்டிருக்கின்றன. இந்தக் கட்டளைகள் பண்டிதரையும் பாமரரையும் சன்மார்க்கத்தில் செலுத்தி ஆண்டவனுடைய தெரிசனனந்தப் பேரின்பப் பாக்கியத்தைப் பெற்றுக்கொள்ளும்படி செய்து வைக்கும் அருமருந்தாகவுமிருந்து வருகின்றன. அவையாவன "கிழக்குத் திசையை நோக்கியும் மேற்குத் திசையை நோக்கியும் நீங்கள் உங்கள் முகங்களைத் திருப்புவது நேர்மையாகமாட்டாது ஆனால் அல்லாவின் மீதும் இறுதி நாளின் மீதும் அமரர்களின் மீதும். வேதங்களின் மீதும். நபிமார்களின் மீதும். உறுதிக்கொண்டு உவப்புடனே ஆஸ்திகளை உதிரக் கலப்புள்ள உறவினர்களுக்கும். கதியற்றவர்களுக்கும்.பொருளின் தேவையை நாடும் வறுமையாளருக்கும் வழிப்போக்கர்களுக்கும் இரந்து வருவோர்களுக்கும் பின்னும் சிறைப்பட்டோரை விடுவிப்பதற்குங் கொடுத்து தொழுகையைக் கடைப்பிடித்து ஏழை விகிதத்தையுங் கொடுத்தவனே சன்மார்க்கப் புருஷனாக இருக்கிறான் வாக்குறுதியை நிறைவேற்றுகிறவர்களும். கொடிய வறுமையிலும் நோயிலும் யுத்தத்தின் வேளையிலும் பொறுத்துக் கொண்டிருப்பவர்களும் (அப்படிப்பட்டவர்களே) (அல்குர் ஆன் 2–177).

இன்னும் நோம்பு நோர்ப்பதையும் மக்கா யாத்திரை செல்வதையும் கட்டளையிடப்பட்டிருக்கிறது (அல்குர் ஆன்)

மேற்கண்ட வேதவாக்கியமானது ஆண்டவனால் மனிதர்களுக்கு இடப்பட்டக் கட்டளையாயிருக்கிறது நம்முடைய ஆண்டவனால் இடப்பட்டக் கட்டளைக்குக் கீழ்படிய வேண்டியது மனிதனுடைய நீங்கலா கடமை என்பதை மறுக்க முடியாது. எஜமான் தன் அடிமைகளுக்கு ஓர் கட்டளையிடுவானேயானால் அதை நிறைவேற்ற வேண்டியது அடியானின் கடமையே யல்லாது அந்தக்கட்டளையினால் என்னப் பலன் கிடைக்கும். அது நியாயமான கட்டளையா நியாயத் தவறுதலானக் கட்டளையா என்று விசாரிக்க வேண்டியது அடிமைகளின் கடமையல்ல தன் எஜமானுடைய கட்டளையின் தத்துவார்த்தத்தைத் தெரிந்துக்கொள்ள அடிமைகளுக்கு சக்தி இல்லை மகாப் பெரிய விவேக சாதுர்யமுள்ள தன் எஜமானுடைய செய்கையை ஆராயப்புகும் ஒருவன் கடல் நீரை ஆழம் பார்க்கப்போன அறிவீனனுக் கொப்பாவான்.

ஆதலின் ஆண்டவனுடைய கட்டளைகளின் தத்துவார்த்தத்தைக் கண்டுபிடிக்க மனிதர்களால் முடியாது ஆனால் ஆண்டவனுடைய அருளைப்பெற்ற மனிதர்கள் தன் அறிவுக்கும் ஆற்றலுக்கும் தக்கபடி சிற்சிலர் சிற்சில பாகங்களை அறிந்திருப்பார்கள் இவர்களைத் தவிர இதர மக்களெல்லாம் தங்களை மகா ஞானவான்களாக மதித்துக்கொண்டு அதில் புண்ணியமில்லை இதில் பலனில்லை என்று ஆண்டவனுடைய கட்டளையை நிராகரித்துவிட்டு ஆண்டவனுடைய கட்டளைக்கு மீறிய செய்கையைக்கொண்டு என்ன பிரயாசை யெடுத்துக்கொண்டாலும் அது பலன் தராது அவர்கள் ஆண்டவனுடைய உண்மையான அடிமையாகவு மிருக்க முடியாது. ஒரு அடிமையானவன் தன் எஜமானுடைய கட்டளைக்கு முற்றிலுங் கட்டுப்பட்டுக் கீழ்ப்படிய வேண்டியதே யல்லாது எஜமான் கட்டளையில் குற்றங் கற்பிப்பவன் அறிவீனனாக மதிக்கப்படுவான் எஜமான் அறிவீனனாகவும் குற்றவாளியாகவு மிருக்கும்போது அவன் அடிமை விவேகியாகவும் யோக்கியனாகவு மிருக்க முடியாது எஜமான் பேரில் குற்றங் கற்பிக்கும் அடிமை அந்த எஜமானுடைய விரோதியே யல்லாது அடிமையாக மாட்டான் அடிமை தன் எஜமான் பேரில் ஒரு குற்றத்தைக் கற்பித்து விடுவானானால் அந்தக் குற்றத்தை விலக்க ஒருவராலு முடியாது. அடிமைபேரில் எத்தனைக் குற்றமிருந்தாலும் தன் எஜமான் ஒரே வார்த்தையில் அக்குற்றங்களை மன்னித்து விடுவான் ஆதலின் ஆண்டவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிவதே அடிமைகளின் கடமையாயிருக்கிறதே யல்லாது எஜமானுடைய கட்டளையில் புண்ணியமுண்டா யில்லையா யென்று விசாரிப்பது அடிமைகளின் அந்தஸ்துக்கு யோக்கியமல்ல எஜமானுடைய கட்டளையை இயன்ற வரையில் நிறைவேற்ற வேண்டியதே அடிமையின் கடமையாகும் எஜமானுடைய கட்டளையின்படி அடிமை நடந்து வருவானானால் அவனே சன்மார்க்கப் புருஷனாக சொல்லப்படுவான் அந்த அடிமைக்கு எஜமான் இன்ன சன்மானந்தான் கொடுப்பானென்று சொல்லமுடியாது அந்த எஜமான் கொடுக்கும் சன்மானத்திற்கு எல்லை இல்லை.

(இஸ்லாம்) ஆண்டவனுடைய சட்டத்துக்குக் கீழ்படிவது அவனுடைய அருளைப் பெற்றுக்கொள்ளுவதற்குள்ள சன்மார்க்கமாயிருக்கிறது இஸ்லாத்தைப் பார்க்கிலும் மேலான வணக்கங்கள் ஒன்றுமே இல்லை ஆண்டவனுடைய கட்டளைக்குக் கீழ்படிவதே அவனுடைய தெரிசனமாந்தத் திருக்காட்சியைப் பெற்றுக்கொள்ளுவற்கு மிகவும் சுருக்கமான வழி யென்பதில ஆட்சேபனை இல்லை.

மேல்கண்ட ஆண்டவனுடைய (2-177) கட்டளையில் கிழக்குத் திசையை நோக்கியும் மேற்குத் திசையை நோக்கியும் (தெற்கு வடக்குத்

திசைகளை நோக்கியும், நீங்கள் உங்கள் முகங்களை திருப்புவதனால் சன்மார்க்கப் புருஷர்களாக முடியாது. இவைகள் வெளி நடிப்பான வணக்கங்களும் ஆண்டவனுடைய சட்டத்தை மீறியவைகளுமே யல்லாது ஆண்டவனுடைய கட்டளைக்குட்பட்டவைகளல்ல வென்று ஆண்டவனே எச்சரிக்கிறான். ஆனால் ஆண்டவனுடைய சட்டத்துக் கட்டுப்பட்டவர்களானால் ஆண்டவன் ஒருவனைத் தவிர வேறொரு ஆண்டவனில்லை என்று ஒப்புக்கொண்டு ஆண்டவனால் கடைசித் தீர்ப்பு நாளில் நன்மை செய்தவர்களுக்கு அதாவது ஆண்டவனுடைய கட்டளைக்குக் கீழ் படிந்தவர்களுக்கு சன்மானமும் கீழ்படியாதவர்களுக்கு தெண்டனையும் கொடுக்கப்படுமென்பதையும் ஆண்டவனுடைய ஏவலை நிறைவேற்றக் கூடிய தேவ தூதர்களையும் ஆண்டவனால் காலத்திற்குக் காலம் வெளிப் படுத்திய வேதங்களையும் அதைக் கொண்டுவந்து மனிதர்களுக்கு உபதே சித்த நபிமார்களையும் ஒப்புக்கொண்டு சமத்துவத்தையும் சகோதரத்துவத் தையும் நிலை நிறுத்தி தொழுகை நோன்பு ஜக்காத்து ஹஜ்ஜு முதலிய வைகளையும் அனுஷ்டிக்கும்படி கட்டளையிடுகிறான். தொழுகையாகிறது சரீரத்திற்கும் ஆத்துமாவிற்கும் ஒரு தீர்வையாகவும் ஆண்டவனிடத்தில் அடிமை முறைப்பாடு செய்துக்கொள்ளும் ஒரு ஸ்தானமாகவு மிருக் கிறது. நோம்பாகிறது ஆன்மாவிற்குக் கொடுக்கும் தீர்வையாயிருக்கிறது (ஆன்மாவுக்கு இரண்டுவகையான தீர்வையும் சரீரத்திற்கு ஒரே தீர்வை யும் செலுத்தப்பட்டிருப்பதால் இரண்டுவிதத் தீர்வையை செலுத்தப் பெற்ற ஆன்மா பலங்கொண்டு ஒரு தீர்வையுடனிருக்கிற மிருகப் பிரா யமான சரீரத்தை அடக்கியாளும்படியான தத்துவத்தை அளிக்கப் பட்டிருக்கிறது).

(ஜக்காத்து) ஏழை விகிதமானது சமத்துவத்தையும் சகோதர த்துவத்தையும் கையாளும்படி போதிப்பதுடன் அந்தப் பொரு ளுக்கு ஒரே தீர்வை செலுத்திவைக்கும்படி நமக்கு அறிவுறுத்தப்பட் டிருக்கிறது. (ஹஜ்ஜு) மக்க யாத்திரையானது ஆண்டவனுடைய சட்டத்துக்கு முற்றிலுங் கட்டுப்பட்டு நடந்துவந்த தமது அடிமைகளை சன்மானம் பெற்றுக்கொள்ளும்படி ஆண்டவனால் அழைக்கப்படும் ஸ்தானமாயிருக்கிறது என்ற தத்துவார்த்தங்களடங்கிய கட்டளைகளை யும் இன்னம் இதைப்போலுள்ள இதரக் கட்டளைகளையும் ஒப்புக் கொண்டு அதன்படி நடந்து வந்தவர்களையே முஸ்லீம்களென்றழைக் கப்படுவார்கள். இவைகளுக்கு இது ஒரு சாதாரண தத்துவார்த்தங்களே யல்லாது வேறில்லை. இவைகளுக்கு மிகவும் விரிவான தத்துவார்த்தங் களை யெழுத இதில் இடந்தராதென நிறுத்தப்பட்டிருக்கிறது. முடி வாக சொல்லுமிடத்து ஆண்டவனுடைய சட்டத்துக்கு முற்றிலுங்

கட்டுப்பட்டுக் கீழ்ப்படிந்தாலொழிய எவ்விதமான வணக்கங்களும் பிரயோஜனந் தராதென்பது மிகையாகாது.

ஆண்டவனுடைய சட்டத்துக்கு அதாவது ஆண்டவனுடைய திருமறையாகிய குர்ஆன் ஷரீபின் கட்டளைகளுக்கு மீறிய வணக்கங்களில் எவ்வித கஷ்டசாத்தியமான வணக்கங்களாயினும் அவைகளைக் கொண்டு ஆண்டவனிடம் எவ்வித சன்மானமும் பெற்றுக்கொள்ள முடியாது. அந்த வணக்கக்காரர்களை சன்மார்க்க புருஷர்களாக சொல்லவு முடியாது. அவர்களெல்லாம ஆண்டவனுடைய கட்டளைக்கு எதிர்க் கட்சியிலிருப்பவர்களாக ஆண்டவனே கூறுகிறான் (அல் குர் ஆன் 8-22).

ஆண்டவனுடைய சட்டத்தை மீறி காட்டிலும் மேட்டிலும் மலையிலும் குகையிலும் போயிருந்துக் கொண்டு கஷ்ட சாத்தியத்தின் பேரில் தவம் புரிந்துவந்த மகான்களெல்லாம் ஆண்டவனிடத்தில் எவ்விதமான சன்மானத்தையும் பெற்றுக்கொள்ளவில்லை யென்பது வெளிப்படையாகவே இருக்கிறது. அவர்கள் இப்போது எங்கிருக்கிறார்கள், என்ன நிலைமையிலிருக்கிறார்கள், என்பதே தெரியவில்லை. உண்மையில் ஒருவர் ஆண்டவனுடைய சட்டத்துக்கு முற்றிலுங் கட்டுப்பட்டுத் தொழில் செய்து ஆண்டவனுடைய சன்மானமாகிய தெரிசனானந்தப் பேரின்பப் பாக்கியத்தைப் பெற்றிருப்பாரேயானால் அவருக்கு ஆண்டவனுடைய கிருபா கடாக்ஷத்தின் பிரகாசமானது ஒரு அற்புத சக்தியை வெளிப்படுத்தி அந்த அற்புத சக்தியின் பரிபூரணமானது மனிதர்களை ஜாதிமத வித்தியாசமில்லாமல் அவரால் இழுக்கச்செய்யும். அப்படியில்லாத வரையில் அவரை ஆண்டவனிடம் சன்மானம் பெற்றுக் கொண்டவரென்றாவது மகானென்றாவது சொல்ல முடியாது. அல்லது இவரை ஆண்டவனிடம் ஐக்கியமானவரென்று சொல்லுவதற்கும் இடந்தராது. இவரின் முடிவானது மற்ற மனிதர்களின் முடிவைக்காண விசேஷித்ததாகவும் சொல்ல இடந்தரவில்லை. ஆண்டவன் பரிபூரணமானவன் அந்தப் பரிபூரணமானது சகல உலகங்களிலும் உள்ளும் புறமும் ஒரு அணுவளவும் இடம்விடாமல் எங்கும் நிறைந்த பொருளாக இருக்கும்போது அந்தப் பரிபூரண பரமான்மாவிலிருந்து பல அணுக்களாக ஜீவான்மா பிரியவாவது அதில் சிலது புண்ணிய கன்மத்தின் காரணமாக அந்தப் பரமான்மாவில் போய் ஐக்கியமாகவாவது சிலது பாவக்கன்மத்தின் காரணமாக மறு ஜன்மத்தில் பிறந்து வந்து அந்தப் பாபகன்மத்தை தொலைக்க வழிதேடவாவது இடமில்லை, ஆண்டவனாகிய பரமான்மா பரிபூரண

மானவன் யென்னும் உண்மையைத் தெரிந்துகொண்ட மனிதன் பரமான்மாவிலிருந்து ஜீவான்மா பிரிந்து வருவதாகவும மறுபடியும் அந்தப் பரமான்மாவில் போய் ஜீவான்மா ஐக்கியமாவதாகவும் சொல்லும் கொள்கையை ஒருக்காலும் ஒப்புக்கொள்ள முடியாது.

அப்படிக்கில்லாமல் ஆண்டவன் தனிமையான ஒரு இடத்திலிருந்துக்கொண்டு பல அணுக்களாகப் பிரிந்து மனிதனென்ற சரீரத் [illegible] உலகத்தில் அடாத செய்கைகளெல்லாம் செய்தும் மனத் திருப்தி யில்லாமல் பல அனுபவங்களைப்பெற்று திருப்தியாகும் வரையில் அனியாயங்களும் அட்டூழியங்களும் செய்துவிட்டு அந்த மூலஸ்தனமாகிய பரமான்மாவில் போய்ச் சேருகிறதாக சொல்லவேண்டி ஏற்படுகிறது. அப்படி சொல்லுகிறதாக இருந்தால் ஆண்டவனுடைய பரிபூரணத்திற்கு ஹானி ஏற்படுகிறது. ஆதலின் ஆண்டவன் பல அணுக்களாகப் பிரிந்து ஜீவான்மாவென்று பெயரைப் பெற்றுக் கொண்டு வந்து பல அனியாயங்களை செய்து வருகிறனென்று சொல்லுவது ஆண்டவனுக்குமகாப் பெரிய அபவாதச்சொல்லுக்கு இடந்தருவதால் அது மிகவும் பாபமான காரியமென்பது மிகையாகாது. ஆதலின் ஆண்டவன் பரிபூரணமானவனகவே இருக்கிறன். அவன் உலகத்தை சிருஷ்டிப்பதற்கு முன் எப்படியிருந்தானே அப்படியே உலகத்தை சிருஷ்டித்த பின்னுமிருந்து வருகிறன். இதுவே உலகம் ஒப்புக் கொள்ளும் ஒரு உண்மையாயிருக்கிறது. ஆண்டவன் தன் திருமறையின் மூலமாகவும் இதையே வற்புறுத்திக் கூறுகிறன். இவ்விடத்தில் இதற்கோர் சிறிய உதாரணத்தையும் எடுத்துக்கொள்ளுவோம்.

சூரியன் மனிதன் பார்வைக் கெட்டக்கூடியதாகவும், ஒரு எல்லைக்குள்ளகப்பட்டதாகவு மிருந்தாலும் அது பரிபூரணமாக இருக்கும்போது சில பாத்திரங்களில் ஜலத்தை நிறப்பி அந்த சூரியன் முன் வைத்து ஒவ்வொரு பாத்திரத்தையும் பார்க்கிறதாக இருந்தால் அந்தப் பாத்திரங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சூரிய பிம்பத்தை காணலாம். அதில் ஒரு பாத்திரத்திலுள்ள ஜலம் வற்றிவிடுமானுல் அந்தப் பாத்திரத்தில் சூரிய பிம்பத்தைக் காணமுடியாது. அந்தப் பாத்திரத்தில் மறுமுறையும் ஜலத்தை நிறப்பினுல் அதில் அந்த சூரியன் காணப்படுகிறது. இதன் உண்மையை உசாவுங்கால் சூரியன் ஒன்றே யல்லாது பலதில்லை. அந்த சூரியனின் பரிபூரணத் தத்துவமானது பாத்திரத்தின் வேறுபாட்டால் பல சூரியனைப்போல் காணப்படுகிறது. உண்மையைத் தெரிந்தவர்கள் பல சூரியன் என்று சொல்லமாட்டார்கள். அந்த ஒரே சூரியனுனது அந்தப் பாத்திரங்களுக்குள் வந்து புகுந்துக் கொள்ளவுமில்லை. பாத்திரத்தில் ஜலம் வற்றியவுடன் அந்த சூரியன் அதிலிருந்து

ஓடிப்போகவுமில்லை. சூரியன் இருந்தவிடத்திலேயே இருந்து வருகிறது ஆதலின் இந்த சிறிய உதாரணத்தின் உண்மைத் தத்துவம் இன்னதென்று தெரிந்துக்கொள்ளுவார்களே யானால் ஆண்டவனாகிய பரமாத்துமாவே பல அணுக்களாகப் பிரிந்து ஜீவாத்மா வென்றப் பெயருடன் தாயின் கெற்பத்தில் கிடந்துழன்று யோனி வழியாக உலகில் வந்து யோக்கியனாகவும் அயோக்கியனாகவும் கொலை செய்கிறவனாகவும் கொலை செய்யப்பட்டவனாகவும் திருடனாகவும் திருட்டுக் கொடுத்தவனாகவும் வியபிசாரியாகவும் வியபிசாரஞ் செய்கிறவனாகவுமிருந்து வருவதாக ஒருவரும் ஒப்புக்கொள்ள முடியாது. இது உண்மையானால் ஆண்டவனே பலவித துஷ்ட செய்கையை செய்து வரும்போது இதில் நன்மை யென்பதும் தீமை யென்பதும் இல்லை என்றே சொல்லலாம். ஆனால் ஆண்டவனுக்கு எந்த ஒரு சிருஷ்டிப் பொருளையும் உதாரணம் சொல்ல முடியாதென்பது உண்மையே. இதில் பரிபூரணம் என்ற ஒன்றுக்கு மட்டும் சூரியனை உதாரணமாக வெடுத்துக்கொண்டிருப்பதால் அறிவாளிகள் அதன் உண்மை தத்துவத்தைத் தெரிந்துக்கொள்ளுவார்கள். அறிவீனர்களுக்கு இந்த உதாரணம் சொல்லப்படவில்லை என்றே நாம் தீர்மானித்திருக்கிறோம்.

ஆண்டவன் பரிபூரணமானவன் என்பதை உலகமே ஒப்புக்கொண்டிருக்கு மோருண்மையா யிருக்கிறது. அந்தப் பரிபூரணம் சகல வஸ்துக்களிலும் உள்ளும் புறமும் ஊடுருவிப் பாய்ந்து அவைகளை தன்னுள்ளடக்கிக் கொண்டிருக்கிறதெனினும் அது எந்த ஒரு வஸ்துவுக்கும் உயிராயிருந்து இயங்கும்படி செய்யவில்லை. இந்தப் பரிபூரணமே சகல வஸ்துவுக்கும் உயிராயிருக்குமானால் அவைகளுக்கெல்லாம் மரணமே வந்திருக்க முடியாது. உயிர் நீங்கியப் பிரேதத்திலும் பட்டுப்போன ஸ்தாவரப் பொருட்களிலும் அந்தப் பரிபூரணம் நிறைந்த பொருளாக இருந்தும் அவைகளை அந்தப் பரிபூரணம் இயங்கும்படி செய்யாததினால் எந்த ஒரு வஸ்துவுக்கும் அந்தப் பரிபூரணம் உயிரா யிருக்கவில்லை என்பதை நாம் பிரத்தியட்சமாகத் தெரிந்திருக்கிறோம். ஆனால் இந்தப் பரிபூரணத்துக்கும் சரீரத்திற்கும் மத்தியில் ஒரு தத்துவமிருந்து இரண்டும் ஒன்று சேரும்படி செய்வதாலும் அதுவே சரீரத்திற்கு எஜமானாக எண்ணி மனப்பால் குடித்துக்கொண்டிருப்பதாலும் அது மிருகப் பிராயமானப் படுகுழியில் விழுந்துக் கிடக்கிறது. இந்த தத்துவமானது பரிபூரணத்தையும் சரீரத்தையும் ஒன்று சேர்த்து வைக்க வந்த ஒரு பொருளே யல்லாது நாம் இந்த சரீரத்திற்கு எஜமானல்லவென்ற அறிவை அது என்றைக்குப் பெற்றுக்கொண்டதோ அன்றுதான் அது சன்மார்க்கப் புருஷர்களின் ஸ்தானத்திற்கு வந்ததாகக் கருதப்

ப்படலாம். முடிவாக மனிதன் தெரிந்துக்கொள்ள வேண்டியதென்ன வென்றால் பரிபூரணத்துக்கும் சரீரத்திற்கும் மத்தியில் வந்திருக்கும் தத்துவப் பொருளென்ன? அந்தப் பொருளுக்கும் ஆண்டவனுக்கும் சம்மந்தமென்ன வென்னும் உண்மையைத் தெரிந்தகொ...டு அதற்கு வேண்டிய தொழில் செய்வதே மனிதனின் கடமையா யிருக்கிறது. இந்த உண்மையைத் தெரிந்துக்கொள்ள வேண்டி யிருந்தால் அதற்கு ஆண்டவனுடைய திருவேதமாகிய குர் ஆன் ஷரீபு வழிகாட்ட முடியுமே யல்லாது மற்ற எந்த ஒரு கிரந்தமும் வழிகாட்ட சக்திபெறுதென்று சொல்லுவது மிகையாகாது. ஆதலின் மனிதனென்று பெயரெடுத்த ஒவ்வொருவனும் அந்த ஆண்டவனுடைய சட்டத்துக்கு முற்றிலுங் கட்டுப்பட்டு நடந்து வரவேண்டியது அவன் பேரில் நீங்கலாக் கடமையா யிருக்கிறது.

எந்த ஒரு மனிதன் ஆண்டவனுடைய சட்டத்துக்கு முற்றிலுங் கட்டுப்பட்டுக் கீழ்ப்படிந்தானோ அந்த மனிதன் ஆண்டவனிடத்தில் பூரா ஜயத்தையும் பெற்றுக்கொண்டிருக்கிறானென்று நமது அனுபோகத்தைக் கொண்டும் ஆண்டவனுடைய திருமறையைக்கொண்டும் பிரத்தியட்சமாகத் தெரிந்துக்கொண்டோம் (அல்குர் ஆன் 2-112).

ஆண்டவன் அன்புருவானவனாக இருக்கிறான். இந்த அன்புருவான (அல்குர் ஆன் 1-2) ஆண்டவன் மனிதர்களில் நல்லவன் பொல்லாதவன் யோக்கியன் அயோக்கியன் என்ற எவ்வித வித்தியாசமும் பாராட்டாமலும் எல்லாருக்கும் ஒன்றுப்போல் உபகாரஞ் செய்து வருகிறானென்பது யாவரும் அறிந்த விஷயமே. இந்த அன்புருவான ஆண்டவனுடைய தெரிசனானந்தப் பேரின்பப் பாக்கியத்தை ஒருவன் பெற்றுக்கொள்ளுகிறதாக இருந்தால் அவனும் அந்த ஆண்டவனைப்போல் அன்புருவானவனாக யிருந்தா லொழிய ஆண்டவனுடைய தெரிசனானந்தப் பேரின்பப் பாக்கியத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது. ஒரு மனிதன் ஆண்டவனுடைய அனுக்கிரகத்தைக்கொண்டு நல்லவன் பொல்லாதவன் யோக்கியன் அயோக்கியன் வெள்ளையன் கருப்பன் என்ற பாகுபாடுசெய்யாமலும் ஜாதிமத வித்தியாசம் பாராட்டாமலும் மனிதர்களுக்கு உபகாரஞ் செய்யக் கடமைப்பட்டவனாக இருக்கிறான் இவன் ஆண்டவனிடம் பெற்றுக்கொண்ட குணத்தின் பேரில் ஜெய பேரிகையின் நாதமானது உலக மக்களின் இருதயமென்னும் அந்தரங்க செவியில் புகுந்து அவர்களை அந்த மகான்பா லிழுக்கச்செய்யும். அந்த மகானுக் களிக்கப்பட்டப் பேரின்பப் பிரகாசமானது சகல தேசத்தாரையும் சகல மதஸ்தர்களையும் சகல ஜாதியாரையும் சூழ்ந்துக்கொள்ளும் அவர்களெல்லாம் ஜாதி மத வித்தியாசமில்லாமல் ஓடோடியுஞ் சென்று அந்த மகானைத்

தெரிசித்து தங்கள் கோரிக்கைகளை மிகவும் வணக்கத்துடன் அந்த மகானின் சமூகம் முறையிடுவோர்கள் அவர்களின் கிரமமான கோரிக்கைகளை அந்த மகானுடைய சிபார்சுக்காக ஆண்டவன் நிறைவேற்றி வைப்பான். இந்த மகான் உலகத்தில் வந்து தன் வேலையில் வெற்றிப் பெற்றதற்கு ஆண்டவனிடம் பெற்றுக்கொண்ட பாக்கியமாயிருக்கிறது.

இந்த பாக்கியத்தைப் பெற்றுக்கொள்ளும் ஒருவன் (இஸ்லாம்) ஆண்டவனுடைய சட்டத்தக்கு முற்றிலுங் கட்டுபட்டுக் கீழ்படிந்த ஒரு முஸ்லிமா யிருக்க முடியுமே யல்லாது மற்றவர்களால் முடியாது. இந்த முஸ்லிம்களை நாலு விதமாகப் பிரித்தலைத்திருப்பதாக தன் திருமறையில் கூறியுள்ளான் (அல்குர் ஆன் 4-69) இதில் முதலாவது நபிமார்களுடைய கூட்டத்திலும் 2வது (சித்தீக்) உண்மையாளர்களின் கூட்டத்திலும் 3வது (ஷஹீது) உறுதியுள்ளவர்களின் கூட்டத்திலும் 4வது (ஸாலிஹ் நல்லவர்களின் கூட்டத்திலும் சேர்த்து வைப்பதாக வாக்குறுதி செய்திருக்கிறான். இவ்விதமான மகான்களுக்கு உலக முடிவு பரியந்தம் ஆண்டவன் கொடுத்திருக்கும் பேரின்பப் பாக்கியத்தின் அற்புத சக்தியானது இருந்து வருமென்பது நிச்சயம்.

ஆண்டவனுடைய சட்டத்தற்குக் கட்டுப்பட்டவர்களிலும் சிலர்களைத் தவிர பெரும்பாலானவர்கள் எவ்விதமான சன்மானத்தையும் பெற்றுக்கொண்டதாக யாதொரு சாட்சியமுமில்லாததால் அவர்களெல்லாம் ஆண்டவனுடைய சட்டத்தை மீறியவர்களைக்காண மேலானவர்களென்று சொல்ல யெப்படி யிடந்தருமென்று சிலருக்கு சந்தேகம் ஜனிக்கலாம். அப்படி சந்தேகம் ஜனிப்பதற்கு இடமில்லை. ஏனென்றால் சட்டத்துக்குக் கட்டுப்பட்டவன் தேவ விசுவாசியாகவும் கட்டுப்படாதவன் தேவ துரோகியாகவு மிருக்கிறான். சட்டத்துக்குக் கட்டுப்பட்டவன் தேவ விசுவாசியாயிருந்தும், அசட்டுத்தனத்தினாலோ அறிவீனத்தினாலோ இகலோகத்தில் தன் தொழிலைப் பூர்த்தி செய்துக் கொள்ளாததினால் அவனுக்கு ஆண்டவனுடைய பேரின்பப் பாக்கியமும் பூர்த்தியாக சொரியப்படாமல பாக்கியாகவே இருந்து வருகிறது. அப்படி யிருந்தாலும் பரலோக யாத்திரையில் அவனுக்கு பூர்த்தியாகாமல் பாக்கி யிருந்துவரும் தொழிலை பூர்த்தி செய்துகொள்ளும்படியான அநேகம் சாதனங்களெல்லாம் செய்துக் கொடுக்கப்பட்டிருப்பதால் பாக்கியான தொழிலை அவன பூர்த்தி செய்துக்கொண்டு அவனும் அந்தப் பேரின்பப் பாக்கியத்தைப் பெற்றுக்கொள்ளுவான். தேவ துரோகியானவன் குற்றவாளியாகவே இருந்து வருகிறான். அவன் தேவ விசுவாசியின் கூட்டத்தில் சேர்ந்திருக்க முடியாது. இவன் சதி அதோகதி என்றே ஆண்டவனுடைய திருமறையானது கூறுகின்றது. (அல் குர் ஆன் 98-6-7)

ஆண்டவனுடைய சட்டத்துக்குக் கட்டுப்பட்ட ஒருவன் தேவ விசுவாசியாயிருந்தாலும் அவன் சில தப்பான காரியங்களை செய்துக் குற்றவாளியாகவு மிருக்கலாம். அவனை எஜமான் தெண்டிக்க வேண்டியது அவசியமே யாயினும் இஷ்டமிருந்தால் எஜமான் மன்னிக்கவும் செய்யலாம். தெண்டிக்கவுஞ் செய்யலாம். இந்த தேவ விசுவாசியான

ஆண்டவனுடைய தெரிசனானந்தப் பேரின்பப் பாக்கியம் தங்களுக்கும் கிடைக்குமென்று நம்புவது அந்த ஆண்டவனுடைய வேத விதிப்படி (அல்குர் ஆன் 2-176) பகல்கனவேயாகும். ஆண்டவனுடைய சட்டத்தை மீறியவர்களுக்கு (பலாத மூத்துன்னா இல்லாவ அன்தும் முஸ்லிமூன்) முஸ்லீமானவர்களாகாமல் மவுத்தாக வேண்டாமென்று எச்சரிக்கிறான். இந்த எச்சரிக்கையை கவனிக்காமல் தங்கள் இஷ்டப்படி நடப்பார்களானால் அவர்கள் கதி அதோகதி என்பதில் ஆட்சேபனை இல்லை. ஆதலின் உலகத்திலுள்ள சகல சிருஷ்டிகளும் ஆண்டவனுடைய சட்டத்துக்கே முற்றிலுங் கட்டுப்பட்டு நடக்கக் கடமைப்பட்டிருக்கின்றன. நமது கண் பார்வையில் வானம் பூமி சூரியன் சந்திரன் நட்சத்திரம் முதலிய பெரிய வஸ்துக்களும் தாதுவர்க்கம் தாவரவர்க்கம் ஜீவவர்க்கம் முதலிய சாமானிய வஸ்துக்களும் ஆண்டவனுடைய சட்டத்துக்குக் கட்டுப்பட்டு நடந்து வருவதை பிரத்தியட்சமாய்க் காண்கிறோம். இந்தப் பஞ்சபூதத்தினால் சமைந்திருக்கும் மனிதன் மட்டும் ஆண்டவனுடைய சட்டத்தை மீறி நடப்பது நியாய விரோதமல்லவா.

ஆண்டன் ஒருவனென்பதும் அவனே உலகத்திற்கெல்லாம் நாயன் (ரெப்பில் ஆலமீன்) என்பதும் மறுக்கவொண்ணா உண்மையாகும். இந்த நாயனை மனுக்குலத்தாரெல்லாம் ஒப்புக்கொண்டிருந்தாலும் அவனுடைய இலட்சணத்தில் பலரும் பலவித அபிப்பிராயப் பேதத்தை யுடையவர்களாயிருக்கிறார்கள். இந்த அபிப்பிராயப் பேதமானது ஆண்டவனுடைய உண்மையான இலட்சணத்தை மறைத்து மிகவும் அனாச்சாரமான முறையில் இறங்கும்படி செய்துவிட்டது. நமது ஆண்டவனுடைய உண்மையான இலட்சணத்தைப்பற்றி தேவ திருமறையாகிய குர் ஆன் ஷரீபில் கூறியுள்ளதை இதற்கு முன்னும் சொல்லி இருக்கிறேன்: அதை மறுமுறையும் எமது சகோதரர்களின் ஞாபகத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆண்டவன் ஒருவன், அவன் பரிபூரணமானவன், அவன் பெறவுமில்லை, பெறப்படவுமில்லை; அவனைப் போல் ஒரு வஸ்துவுமில்லை என்பதே ஆண்டவனுடைய உண்மையான இலட்சணமாகும். இந்த இலட்சணத்தையுடைய ஆண்டவனை யொப்புக்கொண்டு அவன் கட்டளைக்கு முற்றிலுங் கட்டுப்பட்டுக் கீழ்ப்படிவதே இஸ்லாமென்று சொல்லப்படுகிறது. இஸ்லாமென்னும் ஒரே வாக்கியத்துக்குள் சமாதானம் சமத்துவம் சகோதரத்துவமென்னும் மூன்று முக்கிய அம்ஸங்களும் ஜன்ம ஸாபல்லியத்துக்குள்ள தத்துவார்த்தங்களும் இகபரத்துக்குள்ள சகல அம்சங்களும் அடங்கியிருக்கின்றன. இஸ்லாம் என்ற ஒரு சிறிய வாக்கியத்துக்குள் ஒருவன் நுழைந்துவிட்டானானால் அவனிடம் ஜாதி வித்தியாசமாவது நிற வித்தியாசமாவது காணமுடியாது. அவன் மனுவர்க்கங்களை யெல்லாம் இஸ்லாத்தின் சகோதரனாகவே அங்கீகரித்துக்கொள்ளுகிறான். மனுவர்க்கத்தாரெல்லாம் இஸ்லாத்தின் சகோதரர்களென்பதில் ஆட்சேபனை இல்லை. சில வர்ணத்தவர்களைப்போல் மத வித்தியாசமானவர்களை இழித்துரைக்கும் குணம் முஸ்லீம்களிடத்தில் காணமுடியாது. இஸ்லாமத தர்மத்திலும் அவ்வித கெட்ட குணத்தை அனுஷ்டிக்கும்படி சொல்லப்படவில்லை.

# எமது நோக்கம்.

---

எழுவகைப் படைப்புகளிலும் மானிடப்பிறப்பே சிரேஷ்டமானதென்பது உலகறியக் கிடக்கும் உண்மைகளிலொன்று. அதற்கு காரணம் பகுத்தறிவென்னலாம். இப்பகுத்தறிவையமையப் பெற்றயாக்களிற் சிலர் இஸ்லா மார்க்கத்தின் உள்ளக் கிடக்கையை தெளிவாயுணர்ந்து கொள்ளாது, சிற்சில நூல்களை எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். அவர் ளுக்கு இஸ்லா மார்க்கத்தின் உண்மை தத்துவங்களடங்கிய பூரணப்பாசுரங்கள் கிடைக்காததாலோ, அல்லது வேறு எக்காரணத்தினாலோ இத்துறையிலிறங்கியிருக்கிறார்கள். எனினும், அவர்களும் அவர்கள் சகாக்களும் இனி அவ்வித அநீத வழியில் பிரவேசியாமலிருப்பதற்கும், பொது ஜனோபகாரார்த்தமாயிருக்கும் பொருட்டும், உலகானுபவ முறையைத் தழுவி, சில ்தங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அவை ஒன்றன்பின்னொன்றாக எல்லாம் வல்ல இறை ளால் வெளிவருமென்பதைத் தெரிவித்துக் ளுகிறேன்.

ர. செய்குஅலாவுதீன்,

(ஆக்கியோன் குமாரர்).

18

S. B. P. N.

26—404.